# கிறிஸ்துவின்  தெய்வீகம் (The deity of the Christ)

இயேசு கிறிஸ்துவினுடைய தெய்வீகம் எப்படி முக்கியத்துவம் பெறுகிறது என்றால் அவர் பிதாவுக்கு நிகரற்றவராக அல்லது தேவத்துவம் அற்றவராக இருந்தால் நம்முடைய விசுவாசம் வீணாக இருக்கும் மட்டுமல்ல நாம் ஒரு மனிதனை பின்பற்றுகிறவர்களாகவும் இருந்துவிடுவோம். எனவே இயேசுகிறிஸ்து தெய்வீகத்தன்மை வாய்ந்தவர் என்கிற அந்தக் கருத்து கிறிஸ்துவை குறித்துப்படிக்க நமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

**இயேசுகிறிஸ்துவினுடைய தெய்வீகம் என்றால் என்ன?**

இயேசுகிறிஸ்து தெய்வப்பண்புகள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டவராக இருந்திருக்கிறார் எனவே, அவர் தெய்வம். மனிதனுக்கும் கூட சில பண்புகள் இருக்கின்றன ஆனால் சில குறிப்பிட்ட பண்புகள் கடவுளுக்கு மட்டுமே உரிய அப்படிப்பட்ட அந்த பண்புகளை இயேசு பெற்றிருந்தார் எனவே, அவர் தேவன்.

1. Omnipotence (சர்வ வல்லவர் – அனைத்தையும் செய்ய வல்லமையுள்ளவர்)
2. Omniscenes (சர்வ ஞானி – எல்லாம் அறிந்தவர்)
3. Omnipresence (சர்வவியாபி – எங்கும் நிறைந்திருக்கிற தன்மை)

இந்த மூன்று பெரும் தன்மைகளையும் இயேசு தன்னகத்தே பெற்றிருந்ததால் அவர் தேவன். இன்னும் கூட பல தன்மைகளை பெற்றிருந்தார்.

4. அவர் மாறாதவர் (Immutable)
5. அவர் நித்யமானவர் (Eternal)

இந்த தன்மைகள் தேவனுக்கு உரியவைகள்; இவையாவும் இயேசுவினிடத்தில் இருந்தமையால் நாம் அவரை தேவன் என்று தயங்காமல் கூறுகிறோம்.

**பொதுவாக மனிதர்கள் எழுப்பும் கேள்வி என்னவெனில் இயேசு தன்னை தேவன் என்று எங்காவது கூறினாரா? என்று கேட்கிறார்கள்.** உண்மைதான் இயேசு: 'நான் தேவன்' என்று கூறின எந்த ஒரு வசனமும் வேதாகமத்தில் இல்லை.

a. ஆனால் யோவான் 10:29–33 வரை உள்ள வசனங்களில் 'அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்றார். கவனித்தீர்களா…'பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' அதன் பொருள் <u>நான் பிதாவுக்கு சமமானவர்</u> என்பதே. அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார். யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள் (வச.33). இதுதான் இயேசுகிறிஸ்து தேவன் என்பதற்கான சான்று.

b. நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவான் 8:24). இந்த 'நானே அவர்' என்கிற வார்த்தை மூலமொழியில் 'யேகோ எமி' அதாவது 'நானே' (I am) என்றுதான் இருக்கிறது. எனவே 'நானே' என்பது அவரது தெய்வீகத்தன்மையை பறைசாற்றுகிறது.

c. தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள் (யோவான் 5:18). ஆக, தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்று சொல்லும்போது அவர் தம்மை தேவனுக்கு சமமாக்கினதாக யூதர்கள் புரிந்துகொண்டார்கள். இதை புரிந்துகொள்வதற்கு நமக்குத்தான் கஷ்டமாக இருக்குமேதவிர யூதர்களுக்கு எந்த சிரமும் இல்லை.

d. பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா? (யோவான்10:36). இங்கே 'தேவகுமாரன்' என்று அவர் சொன்னது 'தேவதூஷணம்' என்றுதான் அவர்கள் புரிந்துகொண்டார்கள். எனவே, நாம் ஏற்கனவே பார்த்தபடி அவருக்கு இந்த தெய்வீக தன்மை இருக்கிறது.

e. யோவான் 8ம் அதிகாரத்தில் 'இருக்கிறேன் (I am)' என்று அவர் சொல்லும்போது அது அவருடைய தெய்வீகத்தன்மையை காட்டுகிறது எனவே, அவர் எப்போதெல்லாம் 'நான் நானே இருக்கிறேன்' என்று சொன்னாரோ அப்போதெல்லாம் அவரை தேவன் என்று அவர் சொன்னதாக யூதர்கள் புரிந்து கொண்டார்கள்.

f. கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும் (லேவி 24:16). இது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை. இயேசு கிறிஸ்து 'நானே தேவகுமாரன்' என்று சொன்னதினாலே இது 'தேவதூஷணம்' என்று சொல்லி யூதர்கள் அவர்மேல் கல்லெறிய கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.

எனவே இயேசு தம்மை தேவன் என்று சொன்னாரா என்ற கேள்விக்கு 'ஆம்' என்றுதான் பதில் சொல்லவேண்டும். நேரடியான வசனங்களில் அப்படி இல்லை என்றாலும் கூட அவர் தம்மை 'தேவன்' என்று சொன்னதாக வேதாகமத்திலே குறிப்பு இருக்கிறது.

**மூன்று குறிப்புகள் மூலமாக அவருடைய தெய்வீகத் தன்மையைப் பற்றி பார்க்கலாம்.**

1. **தெய்வீக பெயர்கள்**

   a. **<u>தேவன் – El–ஏல்</u>**

   - ஏசாயா 9:6 – இது குமாரனை பற்றிய வசனம்தான். பிதாவாகிய தேவனை பற்றிய வசனம் கிடையாது. வல்லமையுள்ள தேவன் – இந்த வல்லமையுள்ள தேவன் என்பதற்கான எபிரெய சொல் 'ஏல் ஜிப்போர்' என்பதாகும். 'ஜிப்போர்' என்கிற சொல் பழைய ஏற்பாட்டிலே பிதாவாகிய தேவனுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. குமாரனுக்கும் அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறதினாலே குமாரனும் தேவன் என்பதை நிறுவுகிறோம். ஜிப்போர் என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள வேறுசில பழைய ஏற்பாட்டு வசனங்களை பார்க்கலாம்.

- உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார் (உபாகமம் 10:17)
- ...சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே (எரேமியா 32:18)
- யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமுமுள்ள கர்த்தர் (சங்கீதம் 24:8) இந்த வசனங்களிலெல்லாம் வல்லமையுள்ள தேவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
- வார்த்தை தேவனாயிருந்தது (யோவான் 1:1) சிலர் இந்த வார்த்தை தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்று மொழிபெயர்க்கிறார்கள்; ஆனால் அப்படி மொழிபெயர்க்கமுடியாது ஏனென்றால் தேவன் என்பதற்கான கிரேக்கச்சொல் தியோஸ் (Theos). ஆனால் தெய்வீகத்தை குறிக்க பயன்படுத்தப்படும் கிரேக்கச்சொல் தெயோஸ் (Theios). எனவே யோவான் 1:1 இல் தியோஸ் என்கிற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே அதனை 'வார்த்தை தெய்வீகமானது' என்று மொழிபெயர்க்கமுடியாது மாறாக 'அந்த வார்த்தை தேவனாக இருக்கிறது' மொழிபெயர்க்கமுடியும்.
- தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18) என்று தமிழில் வாசிக்கிறோம். ஆனால் 'குமாரன்' என்பதை ஆங்கில வேதாகமத்திலும் (NASB), ராஜரீகம் தமிழ் மொழிபெயர்ப்பிலும் மற்றும் சில புதிய மொழிபெயர்ப்புகளில் 'குமாரன்' என்பது 'கடவுளே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே குமாரன் என்பவர் தேவனே!
- தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான் (யோவான் 20:28). இங்கு 'என் தேவனே' சொல்லை 'O my God' என்று சொன்னதாக நிறைய பேர் சொல்கிறார்கள். அந்த பழக்கம் ஆங்கிலேயர்களுடைய பழக்கம். அது மத்திய கிழக்கு நாடுகளுடைய பழக்கம் இல்லை. அது மட்டுமில்லாமல் அந்த 'O my God' என்று சொல்லுகிற அந்த வழக்கம் மிகவும் பிந்தியது, வேதாகம காலத்திற்குரியது அன்று. எனவே, அவன் 'தேவன்' என்றுதான் அவரைச் சொன்னான். தோமா ஒரு யூதன்; ஒரு யூதன் தவறியும்கூட ஒரு மனிதனை 'தேவன்' என்று சொல்லமாட்டான். நாம் கடவுள் மாறி வந்து காப்பாற்றினீர்கள் என்று சொல்லி சாதாரண மனிதர்களை கூட கடவுள் என்று சொல்லுவோம் ஆனால் யூதர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். எனவே தோமா தன்னோடு மூன்றரை வருடம் ஊழியத்தில் இருந்த நாசரேத்தூரை சேர்ந்த தச்சனுடைய குமாரன் இயேசு என்பவரை தேவன் என்று தயங்காமல் சொன்னான் எனவே அவர் தேவன்.
- தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை.. என்று அப்போஸ்தலர் 20:28 இல் ஒரு குறிப்பு வருகிறது. இரத்தம் சிந்தி சம்பாதித்துக் கொண்டவர் கிறிஸ்துதான்தான் எனவே, இரத்தம் சிந்தினவர் 'தேவன்' என்று இங்கே ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.
- மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன் (ரோமர் 9:5) என்று வாசிக்கிறோம் இல்லையா? அந்த 'இவர்' என்பது இயேசுகிறிஸ்துவைதான் குறிக்கிறது என்பதை அந்த

வசனத்தை வாசிக்கும்போதே நமக்கு புரியும் எனவே, இயேசு 'தேவன்' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

- மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து (தீத்து 2:13) என்று வாசிக்கிறோம். எனவே அந்த வசனமும் இயேசு கிறிஸ்துவை 'தேவன்' என்று காட்டுகிறது.
- குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது (எபி 1:8). நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் (எபி 1:9). இந்த வசனங்களில் பிதாவாகிய தேவன் குமாரனை நோக்கி 'தேவனே' என்று அழைப்பதை நாம் பார்க்கிறோம் இதன் மூலமாகவும் இயேசு கிறிஸ்து 'தேவன்' என்று நிறுவுகிறோம்.
- நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே (இயேசு) மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார் (யோவான் 5:20). எனவே, அவர் மெய்யான தேவன்.

எனவே இயேசு தன்னை 'தேவன்' என்று சொல்லிக்கொண்டாரா என்ற கேள்விக்கு 'இல்லை' என்கிற பதிலை நாம் சொல்லவேண்டியதாக இருந்தாலும் இயேசுகிறிஸ்து தேவனா? என்று கேட்டால் 'ஆம்' என்று தயங்காமல் சொல்லலாம்.

b. **கர்த்தர் மற்றும் ஆண்டவர்**

- நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் (மத் 22:44) கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி என்று இருக்கிறது அது சங்கீதம் 110:1ன் மேற்கோள் வசனமாக இருக்கிறது. இதில் 'கர்த்தர்' என்பதற்கு 'யேகோவா' என்றும்; 'ஆண்டவர்' என்பதற்கு 'குமாரனை' பற்றிய குறிப்பாக பார்க்கமுடியும். எனவே, குமாரன் 'ஆண்டவர்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்.
- என் தேவனே என் ஆண்டவனே (யோவான் 20:28) என்கிற அந்த வார்த்தையிலும் அவர் 'ஆண்டவர்' என்கிற பெயரைப் பெற்று இருக்கிறார்.
- ரோமர் 10:9,13 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவுக்கு 'கர்த்தராகிய இயேசு' என்று வருகிறது. எனவே அங்கேயும்கூட இயேசுகிறிஸ்து 'கர்த்தர்' என்று சொல்லப்படுகிறார். இந்த கர்த்தர் என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டிலே யெகோவாவுக்கு மட்டும்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது எனவே, இயேசுகிறிஸ்துவும் 'கர்த்தர்' என்று சொல்லப்பட்டிருக்கிறார்.

c. **குமாரன்**

'குமாரன்' என்றால் அது நாம் ஏற்கனவே சொன்னதுபோல 'தேவனுடைய குமாரன்' என்பதைத்தான் குறிக்கிறது. இப்பொழுது இந்த 'குமாரன்' (Son) என்பதினுடைய மூன்று விதமான பயன்பாடுகள் பற்றி பார்க்கலாம்.

i. <u>இயல்பான (Normal) பயன்பாடு</u>

இயல்பான பயன்பாடு என்றால் 'ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்' இது ஒரு இயல்பான பயன்பாடு. தகப்பன் மகனுக்குள்ள உறவு. ஆனால் அதை இயேசு கிறிஸ்துவுக்கு பயன்படுத்தமுடியாது.

ii. <u>உருவகமான ((Idiomatic) பயன்பாடு</u>

இது ஏதோ ஒன்றை உருவகமாக வைத்து புரியவைப்பதாகும்.

- உ.ம். ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே (அப் 4:36). பர்னபாவின் தகப்பன் பேர் ஆறுதல் அல்ல.
- செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார் (மாற்கு 3:17)
- கேட்டின் மகன் (யோவான் 17:12) என்று யூதாஸ்காரியோத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய அப்பா பெயர் 'கேடு' கிடையாது. அவன் கெட்டதை தெரிந்துகொண்டதால் கேட்டின் மகன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

iii. <u>திரித்துவ (Trinitarian) பயன்பாடு</u>

இந்தப் பயன்பாட்டில் மட்டும்தான் இயேசுகிறிஸ்துவை நாம் 'குமாரன்' என்று சொல்கிறோம். அப்படி சொல்வதன் மூலமாக அவர் தேவன் என்றுதான் நிறுவப்படுகிறது. 'குமாரன்' என்றால் என்ன? குமாரன் என்பவர் தந்தையின் இயல்பையும் சாயலையும் பெற்று பிரதிபலிப்பவர். எனவே தேவகுமாரன் பிதாவாகிய தேவனை பிரதிபலிப்பதினால் இந்த நாமத்தின் மூலமாகவும் நாம் நிறுவுகிறோம்.

**<u>ஒரே பேறான குமாரன்</u>**

'பேறான' என்பது பெற்றெடுத்த என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. தமிழில் மட்டுமல்ல பல்வேறு மொழிகளில் இந்த குழப்பம் இருக்கிறது. எனவே, மக்கள் இயேசுகிறிஸ்து பெற்று எடுக்கப்பட்டவர் என்று புரிந்துகொள்கிறார்கள். அதற்கு காரணம் இந்த 'பேறான' என்கிற மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட ஒரு தவறான புரிந்துகொள்ளுதல் ஆகும்.

'ஒரே பேறான' என்று தமிழிலும் 'only begotten Son' என்று ஆங்கிலத்திலும் இருந்தாலும் கிரேக்க மொழியில் 'மோனோகினேஸ்' (Monogenes) என்றுதான் இருக்கிறது. மோனோ என்றால் ஒன்று; கினேஸ் என்றால் என்றால் 'ஸ்பெஷல் கிளாஸ்' என்ற அர்த்தம். அப்படியானால் 'இந்த வகையில் பிரதானமானவர்' என்று அர்த்தம். NIV ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு சரியாக இருக்கிறது (he gave his one and only Son) begotten என்ற வார்த்தை பயன்படுத்தவில்லை. .மூலபாஷையிலும் 'குமாரன்' என்னும் பொருள் இல்லை.

'மோனோகினேஸ்' என்கிற பதம் புதிய ஏற்பாட்டில் மொத்தம் ஆறு இடங்களில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதில் ஒரு இடத்தில் மட்டும் (எபி 11:19) ஈசாக்கை பற்றி வருகிறது மற்ற எல்லா இடத்திலும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி தான் விவரிக்கிறது (யோவான் 1:14,18; 3:16,18; 1 யோவான் 4:9)

தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான் (எபி 11:19). ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருந்தான். அவள்

அவனுக்குச் சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும் பெற்றாள் (ஆதி 25:1,2). இங்கு ஆபிரகாமுக்கு ஆறு பேர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இஸ்மவேல் மற்றும் ஈசாக்கோடு சேர்த்து எட்டு பேர் இருக்க, ஈசாக்கை மட்டும் எவ்வாறு ஏகசுதன் என்று சிறப்பான முறையில் சொல்லப்பட்டிருக்கிறதோ அதேபோலதான் கிறிஸ்துவுக்கும் 'மோனோகினேஸ்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே 'மோனோகினேஸ்' என்கின்ற வார்த்தையின் மூலமாக 'தேவனுடைய தன்மையை' வெளிப்படுத்தி காண்பிக்ககூடியவராக இருக்கிறார்.

**2. தெய்வீக பண்புகள்**

a. **<u>நித்திய தன்மை</u>**

- யோயான் 1:1 – இங்கு 'ஆதியிலே' என்கின்ற வார்த்தையானது ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆதியிலே என்ற வார்த்தைக்கும் முன்னானது.
- ஏசாயா 9:6 – நித்திய பிதா
- எபி 1:11 – நீரோ நிலைத்திருப்பீர்
- எபி 1:12 – நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை

  இந்த வசனங்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய தன்மை நிறுவப்படுகிறது.

b. **<u>எங்கும் நிறைந்தவர் அல்லது சர்வவியாபி</u>**

- இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் (மத் 18:20)
- இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத் 28:20).

  இந்த வசனங்கள் அவருடைய ஆவிக்குரிய பிரசன்னத்தைதான் குறிக்கிறது.
- யோவான் 3:13 – பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை. ஒரே நேரத்தில் அதாவது பூலோகத்தில் இருக்கும் நேரம் பரலோகத்திலும் இருக்கிறவராக காணப்படுகிறார்.

c. **<u>எல்லாம் அறிந்தவர்</u>**

- அவர்கள் (வேதபாரகர், பரிசேயர்) சிந்தனைகளை அறிந்து… (லூக்கா 6:8; 11:17)

  மனிதர்களுடைய இருதயத்தில் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறியக்கூடிய தன்மை இறைவனுக்கு மட்டுமே உரியது எனவே அவர் தேவன்.
- தன்னோடு பேசின சமாரியப் பெண்ணுடைய கடந்த கால வரலாற்றை அவர் தெரிந்துவைத்திருந்தார் (யோவான் 4:18). அதுமட்டுமில்லாமல் அந்தப் பெண்மணியே சொல்றாங்க நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார் (4:29).
  - யூதாஸ் தன்னை காட்டிக்கொடுப்பான் என்று தெரியும்.
  - பேதுரு தன்னை காட்டிகொடுப்பான் என்று தெரியும்.
  - அவர் எருசலேமில் எப்படிப்பட்ட விதத்தில் மரணமடையபோகிறோம் என்பதை அறிந்து வைத்திருந்தார். அவருடைய உயிர்தெழுதலைப் பற்றி அவருக்குத் தெரியும். அவர் மறுபடியும் வருவதுகூட அவருக்கு தெரியும்.

இப்போது கிறிஸ்துவின் பகைவர்களால் வேதத்திலிருந்து முன்வைக்கக் கூடிய ஒரு கேள்வி: மாற்கு 13:32இல் மனுஷகுமாரன் வரும் அந்த நேரம் தனக்கு தெரியாது என்று சொல்லியிருப்பதால் அவருடைய அறிவு குறையுள்ளதுதான் என்கிறார்கள்.

விளக்கம்: மாற்கு இயேசுகிறிஸ்துவை ஊழியராக காட்டுகிறார். எனவே அந்நிலையில் இயேசுகிறிஸ்து அவருடைய வருகையின் நேரத்தை பற்றி அறியவில்லை. ஊழியக்காரர் நிலையில் அவர் தன்னுடைய நேரத்தை பற்றி அறியவில்லை என்று சொன்னாலும் கூட அவர் அறியாதது ஒன்றுமில்லை என்பது தான் உண்மை.

d. **சர்வவல்லவர்**

- வல்லமையுள்ள தேவன் (ஏசாயா 9:6)
- அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே… (பிலிப்பியர் 3:21)
- சர்வவல்லமையுள்ள கர்த்தர் (வெளி 1:8)
- நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் (வெளி 1:18). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத் 28:18). அவருக்கு எல்லா வல்லமையும் அதிகாரமும் இருக்கின்றன என்பதை இந்த வசனங்கள் நிரூபிக்கிறது.

இந்த எல்லா வல்லமையும் நிறைந்த அவர் ஒரு சாதாரண மனிதனைப் போல சிலுவையில் அறையப்படுவதற்கு பிடிக்கப்பட்டபோது தம்மை ஒப்புக்கொடுத்தார். இயேசுவானவர் தம்முடைய வல்லமையை சிலுவையில் அறையப்படும்போது காண்பிக்கவில்லை ஏனென்றால் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டும் (மத் 26:55,56). வேதவாக்கியங்கள் என்ன சொல்கிறது தெரியுமா? இந்த மனித குலத்தின் மீட்புக்காக இறைவன் தானே (மானிட உருவம் எடுத்து) பாவமற்ற மனிதனாக பிறந்து பாவமற்று வாழ்ந்து தம்முடைய பரிசுத்த இரத்தத்தை சிலுவையிலே சிந்தி எல்லா மக்களுடைய பாவங்களையும் கழுவி அவர்களுக்கு ஒரு இரட்சிப்பை ஏற்படுத்தி அவர்களை மீட்டு கொள்வதுதான் இந்த தேவதிட்டம். அவரை ஒப்புக்கொடுத்து பற்றி பைபிள் சொல்லுகிறது: பரபாசை விடுதலையாக்கி இயேசுவையோ அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

e. **மாறாதவர்**

- இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13:8)
- நான் கர்த்தர் நான் மாறாதவர் (மல் 3:6)

இயேசு கிறிஸ்து தேவன் என்பதை இவ்வசனங்கள் மூலம் அறியலாம்.

**3. தெய்வீக செயல்கள்**

அவர் செய்த செயல்களின் மூலமாக அவருடைய தெய்வீகத்தன்மையை நிறுவுகிறோம்.

a. **படைப்பு (Creation)**

இயேசு கிறிஸ்து படைப்பாளர் என்பதற்கான குறிப்புகளை நாம் பார்க்கிறோம்.

- சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவான் 1:3). இங்கே வார்த்தையாகிய தேவனைப்பற்றி

சொல்லப்பட்டிருக்கிறது. வார்த்தை உண்டாக்கினது என்றால் அந்த வார்த்தை இயேசு கிறிஸ்துதான்.

- அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது (கொலோ 1:16).

b. **பாதுகாத்தல் (Sustaining)**

- ...எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோ 1:17) அறிவியல் (விஞ்ஞானம்) சொல்வது என்னவென்றால் ஒரு காணப்படாத வல்லமைதான் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது என்கிறது. ஆனால் வேதாகமம் சொல்லுவது: அவருக்குள் எல்லாம் நிலைநிற்கிறது.

c. **பாவங்களை மன்னித்தல்**

- ... உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது (மாற்கு 2:5). என்று சொல்லுகிறார் உடனே வேதபாரகரில் சிலர்: தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள் (2:7). கிறிஸ்துவோ பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார் உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்குமுன்பாகப் போனான். (2:10–12).

இதில் பாவங்கள் மன்னிக்கப்பட்டது வெளியே தெரியாது; ஆனால் அதற்கு ஒரு அடையாளம் தேவைப்படுகிறது. ஆக, நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு சொன்னவுடனே அவன் எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கிறான். இயேசுகிறிஸ்து: எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்கிற வார்த்தை அப்படியே நிறைவேறுமானால் பாவம் மன்னிக்கப்பட்டது என்கிற வார்த்தையும் நிறைவேறிற்று என்பதற்கு அது அடையாளமாக இருக்கிறது எனவே, இயேசு கிறிஸ்து பாவங்களை மன்னிக்கிறவர் என்கிற வகையில் அவர் தேவன்.

d. **ஆராதனையை ஏற்றுக்கொள்ளுதல்**

கிறிஸ்துவானவர் ஆராதனையை ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும் அவருடைய தெய்வீகத்தன்மை வெளிப்படுகிறது.

ஆராதனை என்பது 'செலுத்துதல்' என்பதாகும். ஏதோ ஒரு காரணத்திற்காக நாம் செலுத்துகிறோம் என்று பொருள்கொள்ளலாம். அந்த வகையில் அவர் நம்முடைய ஆராதனையை ஏற்றுக்கொள்ள தகுதியானவரும், அதற்கு பாத்திரமானவருமாக இருப்பதனால் அதை நாம் செலுத்துகிறோம்.

- பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை

அவருக்குச் செலுத்துங்கள் (சங்கீதம் 29:1,2). கர்த்தருக்கே என்று சொல்லும்போது அவருக்கு மட்டுமே.செலுத்தவேண்டும்.

- கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்... (சங்கீதம் 34:1).
- அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (எபி13:15).
- தூதர்களைப் பணிந்துகொள்ளகூடாது. அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் (வெளி 19:10).

தேவனைத்தவிர வேறு யாரும் ஆராதனையை ஏற்றுக்கொள்ளவில்லை ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆராதனையை ஏற்றுக்கொண்டதன் மூலமாக தம்முடைய தெய்வீகத்தன்மையை அவர் உறுதிப்படுத்துகிறார்.

- அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு...(மத் 2:11). அங்கே ஞானிகள் வந்து குழந்தை இயேசுவைதான் பணிந்துகொண்டார்கள். 'அதை' என்பது குழந்தை இயேசுவைதான் குறிப்பிடுகிறது.
- அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான் (மத் 8:2)
- படவில் உள்ளவர்கள் வந்து (சீஷர்கள்): மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள் (மத் 14:33).
- சீஷர்கள் அவருடைய உயிர்த்தெழுதல் பிறகு... அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள் (மத் 28:9).

எனவே அவர் ஆராதனையை ஏற்றுக்கொண்டதன் மூலமாக அவரது தெய்வீகதன்மை உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே அவர் தெய்வம்.